| | |
|---|---|
| | காந்திகிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகம்<br>காந்தகிராமம், திண்டுக்கல் - 624 302<br>சிற்றுண்டி விடுதி ஒப்பந்தப் புள்ளி கோரி<br>அறிவிப்பு |

காந்திகிராமம் கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் சிற்றுண்டி விடுதியை ஒப்பந்த முறையில் ஏற்று நடத்த, தகுதிவாய்ந்த அனுபவமுள்ள, குறைந்தபட்சம் 3 (மூன்று) வருட முன் அனுபவமிக்கவராகவும் உயர் கல்வி நிறுவனங்களில், தொழிற்சாலைகளில், உணவகம் நடத்திய அனுபவம் மிக்கவராகவும், வருடத்திற்கு **ரூ.25** லட்சம் வரை சிற்றுண்டியகத்தில் வியாபாரம் செய்தவராகவும் இருக்க வேண்டும். ஒப்பந்தக்காரர் அரசால் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும். மாநில அரசு ஆணையின்படி தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின்(fssai) உரிய சான்றிதழ் பெற்றவராக இருக்கவேண்டும். மற்றும் வருமானவரி நிரந்தர கணக்கு எண் (PAN) நம்பர் /சரக்கு மற்றும் சேவை வரி எண்(GST) உள்ளவர்களிடமிருந்து ஒப்பந்தப் புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில் வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தப் புள்ளி பற்றிய விவரங்கள் மற்றும் விண்ணப்பபடிவத்தை பல்கலைக் கழக **www.ruraluniv.ac.in** என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து அனுப்பவேண்டும் ஒப்பந்தப் புள்ளிகள் 10.12.2025 **மாலை 3.00 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.** 10.12.2025 **ஆம் தேதி அன்று மாலை 4.00** மணியளவில் ஒப்பந்ததாரர் அல்லது அவரது முகவர் முன்னிலையில் ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும்.

27/11/25

**பதிவாளர்**

நாள்: 26.11.2025

இடம்: காந்திகிராமம்

<u>குறிப்பு:</u> தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்:

**0451 – 2452 371 to 2452 375 Extn: 2035 & 2036**

# காந்திகிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகம் -காந்திகிராமம்

## சிற்றுண்டியகம் - ஒப்பந்தப்புள்ளி படிவம்

1. ஒப்பந்ததாரர் பெயர் :

2. முழு முகவரி :

3. அ) தொலைபேசி எண்: ஆ) பேக்ஸ் எண்:

   இ) மின்னஞ்சல் : ஈ) செல் எண் :

4. பதிவு பெற்ற ஒப்பந்ததாரரா? :ஆம்/இல்லை
   (தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும்
   மருந்து நிர்வாகத்துறை)(உணவு பாதுகாப்பு பிரிவு)
   ஆம் என்றால் முழு விவரம் :
   **License details including renewal]**

5. நிரந்தர வருமானவரி கணக்கு எண் :
   (PAN card No.)

6. சிற்றுண்டியகத்தை நடத்திய முன் அனுபவம்
   முழு விவரம் :
   [கடந்த மூன்று ஆண்டுகளுக்கான வருமானவரி
   செலுத்திய ரசீது நகல், அனுபவச்சான்று
   (கடந்த மூன்று ஆண்டுகளுக்கு)சமர்ப்பிக்க
   வேண்டும்]

7. ஒப்பந்ததாரர் குறிப்பிடும் மாதாந்திர வாடகை
   (ரூபாய்________________________________
   ____________________________________
   ________________________________மட்டும்)

   | Rs. |
   |---|

**<u>சான்றிதழ்</u>**

ஒப்பந்தப் புள்ளியில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அனைத்துக்கும் கட்டுப்பட்டு ஒப்புதல் அளிக்கின்றேன்.

நாள்:
இடம்: ஒப்பந்ததாரர்
கையெழுத்து

## காந்திகிராம கிராமிய் நிகர்நிலை பல்கலைக்கழகம் - காந்திகிராமம்

# சிற்றுண்டியக நிபந்தனைகள்

1. ஒப்பந்தப் புள்ளி படிவத்தில் உள்ள அனைத்து விபரங்களும் முழுமையாக பூர்த்தி செய்யப்படவேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத படிவம் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

2. சிற்றுண்டியகம் செயல்படும் நேரம்- காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை. வாரத்தின் எல்லா அலுவலக நாட்களிலும் சிற்றுண்டியகம் கட்டாயமாக செயல்பட வேண்டும். சனிக்கிழமை பல்கலைக்கழகத்திற்கு விடுமுறையாக இருப்பினும் சிற்றுண்டியகம் செயல்பட வேண்டும். ஞாயிற்று கிழமைகளில் தேவை இருப்பின் சிற்றுண்டியகம் இயங்கலாம்.

3. **ஒப்பந்தக்காலம்:** ஒரு வருடம்: ஒப்பந்தம் முதலில் ஓராண்டிற்கு மட்டுமே விடப்படும். கண்காணிப்பு குழுவின் முன் அனுமதி பெற்று இரண்டாமாண்டு ஒப்பந்ததாரரின் செயல்பாட்டின் அடிப்படையில் ஒப்பந்தம் நீட்டிக்கப்படும். இரண்டாவது ஆண்டு முடிந்த அன்றே ஒப்பந்தத்தில் உள்ள சரத்துக்கள் அடிப்படையில் சிற்றுண்டியகத்தை நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும். இரண்டு ஆண்டிற்கு மேல் கால நீட்டிப்பு அனுமதிக்கப்படமாட்டாது.

4. ஒப்பந்ததாரர் பணியாளர்களுக்கான தமிழ் நாடு அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச சம்பளம், இ.பி.எப் (EPF Act 1952) மற்றும் இ.எஸ்.ஐ இவற்றிற்கான தொகையினை அவர்களுடைய கணக்கில் செலுத்துவதை உறுதி செய்து அதற்கான சான்றிதழை பிரதி மாதம் 15ஆம் தேதிக்குள் தவறமால் நிர்வாகத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்

5. ஒப்பந்ததாரர் தேவையான ஒப்பந்த பணியாளர்களை மட்டும் சிற்றுண்டியகத்தில் அமர்த்த வேண்டும். ஒப்பந்த பணியாளர்களின் பெயர்களை நிர்வாகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் ஒப்பந்த பணியாளர்களுக்கு சீருடையும் அடையாள அட்டையும் வழங்கி பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

6. ஒப்பந்ததாரர் குறிப்பிடும் பொருள்களின் அளவும் விலையும் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும். **ஒப்பந்தகாரர் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் உள்ள அனைத்து உணவு பொருட்களுக்கும் விலையினை தவறாமல் குறிப்பிட வேண்டும்.**

7. சிற்றுண்டியகத்தில் விற்கப்படும் அனைத்து உணவு பொருள்களுக்கும் கணிணி விலை விபர சீட்டு மற்றும் ரசீதும் வழங்க வேண்டும்.

8. ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட உணவு பட்டியலில் இடம்பெற்றுள்ள அனைத்து உணவு வகைகளின் விலை பட்டியல் உணவகம் முன்பாக அனைவரின் பார்வையில் தெரியும்படி வைக்கப்படவேண்டும்.

9. சிற்றுண்டியகம் சீரான முறையில் நடத்துவதற்காகப் பல்கலைக்கழகம் தனது உறுப்பினர்களை உள்ளடக்கிய கண்காணிப்புக் குழு ஒன்றை அமைத்துள்ளது. அக்குழுவிற்கு எந்த நேரத்திலும் சிற்றுண்டியகத்தை பார்வையிடவும் ஆய்வு செய்யவும் முழு உரிமை உள்ளது.

10. ஒப்பந்ததாரர் சிற்றுண்டியகம் நடத்துவதில் குறைந்தபட்சம் 3 (மூன்று) வருட முன் அனுபவமிக்கவராகவும் உயர் கல்வி நிறுவனங்களில், தொழிற்சாலைகளில் உணவகம் நடத்திய அனுபவம் மிக்கவராகவும் இருக்க வேண்டும். அதற்கான சான்றிதழ் இணைக்கப்படவேண்டும். வருடத்திற்கு ரூ.25 லட்சம் வரை சிற்றுண்டியகத்தில் வியாபாரம் செய்தவராகவும் இருத்தல் அவசியம். ஒப்பந்ததாரர் "வருமான வரி நிரந்தர கணக்கு எண்" (PAN) வைத்திருப்பவராகவும் மற்றும் அரசு பதிவுபெற்ற உணவு உற்பத்தியாளர் என தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறையிடமிருந்து உரிமம் பெற்றவராகவும் இருக்க வேண்டும். நிர்வாகம் சிற்றுண்டியகத்தில் இதர (Furniture, Fixtures & Annexures) பொருட்களை ஒப்படைத்தபின், அப்பொருட்களுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார். ஒப்பந்தம் முடிவடையும் போது அவைகளை ஒப்பந்ததாரர் நிர்வாகத்திடம் அமைத்துக் கொடுத்துள்ள அதே நிலையில் ஒப்படைக்க வேண்டும். தவறும் பட்சம் முன்பணத்தில் ஈடு செய்யப்படும்.

11. சமையல் பாத்திரம் மற்றும் சமையல் சம்மந்தப்பட்ட அனைத்துதளவாடப் பொருட்களையும் ஒப்பந்ததாரரே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

12. பிளாஸ்டிக் மற்றும் எளிதில் மக்கிப்போகாத கப் மற்றும் பிளேட்டுகள் உபயோகிக்கக் கூடாது.

13. பல்கலைக்கழக விருந்தினர் விடுதியில் தேவைப்படும் உணவு மற்றும் இதர தேவைகளை முன் ஆர்டரின் பேரில் ஏற்பாடு செய்து தரவேண்டும். அதேபோன்று பல்கலைக்கழகத்தில் நடைபெறும் விழாக்களுக்கும் முன் ஆர்டரின் பேரில் ஏற்பாடு செய்து தரவேண்டும்.

14. ஒப்பந்தபுள்ளிகளின் தேர்ந்து எடுக்கப்பட்ட உயர்ந்த மதிப்பிட்டின் மாத வாடகை சிற்றுண்டியகத்திற்கு நிர்னயக்கப்படும். மேலும் ஒப்பந்ததாரர் மாத வாடகையை **ரூபாய்............../- (ரூபாய்..............................................................மட்டும்)** அடுத்த மாதம் 10ஆம் தேதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து மாத வாடகையை செலுத்த தவறினால் ஒப்பந்தம் முறிவு செய்யப்படும். மேலும் காலம் கடந்து செலுத்தும் மாதாந்திர வாடகை (கட்டிடம், தண்ணீர் மற்றும் மின்சாரம்) நாள் ஒன்றுக்கு 9.1% வட்டிவிகிதத்தில் அபராதத்தொகை கட்டவேண்டும்.

15. தண்ணீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் சிற்றுண்டியக மாத வாடகையில் கட்டுப்படாது. சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் மட்டுமே கட்டாயமாக உணவகத்தில் வழங்கப்படவேண்டும். ஒப்பந்ததாரர் விருப்பப்பட்டால் காந்திகிராம பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்படும் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை சுமார் 100 லிட்டர் வரை நாள் ஒன்றுக்கு பெற்றுக்கொண்டு அதற்கான தொகையை (0.50 பைசா/ ஒரு லிட்டர்) வீதம் மாத வாடகையுடன் சேர்த்து செலுத்தலாம்.

16. சிற்றுண்டியகத்தில் பயன்படுத்தப்படும் தண்ணீருக்கான கட்டணத்தை மாதாமாதம் எந்த அளவு பயன்படுத்தப்படுகிறதோ அந்த அளவிற்கான தண்ணீர்கட்டணம் (0.07 பைசா/ ஒரு லிட்டர்) செலுத்த வேண்டும் (as per flow meter reading).

17. ஒப்பந்தக் காலத்தில் கட்டிடப் பராமரிப்பு ஒப்பந்ததாரர் பொறுப்பாகும். ஒப்பந்த காலத்தில் கட்டிடத்தில் ஏதேனும் பாதிப்பு ஏற்படுத்தினால், அதனை சரிசெய்து கொடுக்க வேண்டியது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.

18. ஒப்பந்தக் காலத்தில் கட்டிடத்தை விரிவுபடுத்துவதோ, மாற்றியமைப்பதோ கூடாது. சிற்றுண்டியகத்தில் ஏதேனும் சிறிய மாற்றம், மற்றும் கூடுதல் வசதிகள் தேவைப்பட்டால் கண்காணிப்பு குழுவின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தக்காரர் தன் சொந்த செலவில் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

19. ஒப்பந்த முடிவில் கட்டிடம் மற்றும் கட்டிடம் சம்பந்தப்பட்ட பொருட்களை ஒப்பந்தம் ஆரம்பத்தில் இருந்தது போலவே ஒப்படைக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான நஷ்ட ஈடு ஒப்பந்ததாரர் செலுத்திய முன் பணத்திலிருந்து வசூல் செய்யப்படும்.

20. சாதாரணமாக ஒப்பந்தகால முறிவு இருதரப்பினருக்கும் பொதுவாக ஒருமாத முன்னறிவிப்பின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். ஏதேனும் அசம்பாவிதம் நேரிட்டால் 24 மணிநேர கால அவகாசத்திற்குள் சிற்றுண்டியை நிர்வாகத்திடம் ஒப்படைத்து வளாகத்தைவிட்டு வெளியேற வேண்டும்.

21. மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை **10.12.2025 ஆம் தேதி அன்று மாலை 3.00 மணிக்குள் பல்கலைக் கழக பதிவாளர், காந்திகிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழகம் - காந்திகிராமம், என்று முத்திரையிடப்பட்டு பதிவாளர் அலுவலக வாளகத்தில் உள்ள ஒப்பந்தபுள்ளி பெட்டியில் நேரடியாகவோ, தபால்மூலமாகவோ சமர்பிக்கவேண்டும். முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 10.12.2025 ஆம் தேதி அன்று மாலை 4.00 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.** தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர் நிர்வாக குழுவின் பரிசிலனை மற்றும் ஒப்புதலுக்குப் பின் அறிவிக்கப்படும். **ஒப்பந்தப் புள்ளிகளை ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பல்கலைக்கழகத்திற்கு முழு உரிமை உண்டு. இதுசம்பந்தமாக பல்கலைக்கழகத்தின் முடிவே இறுதியானது.**

22. அறிவிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் அறிவிப்பு நாளிலிருந்து **பத்து நாட்களுக்குள் முன்பணம் Rs.3,00,000/-** (ரூபாய் **மூன்று லட்சம் மட்டும்)** பல்கலைக்கழக வங்கி கணக்கு **எண்.8500101010000** பல்கலைக்கழக வளாக கனரா வங்கி கிளையில் செலுத்திய பின் சிற்றுண்டியகத்தை ஏற்று நடத்தவேண்டும். இல்லையெனில் அடுத்த ஒப்பந்ததாரருக்குச் சிற்றுண்டியகத்தை நடத்த வாய்ப்பு அளிக்கப்படும்.

23. அறிவிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் ரூ.40/- மதிப்புள்ள India Non Judicial முத்திரைத்தாளில் அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டதற்கான உத்திரவாதம் வழங்கவேண்டும்.

24. சிற்றுண்டியகத்தில் அசைவ உணவு வகைகள் விற்பனை செய்யவோ, உபயோகப்படுத்தவோ கூடாது.

25. ஒப்பந்ததாரர் எந்த காலத்திலும் சிற்றுண்டியகத்தை மொத்தமாக அல்லது பகுதியாக உள்வாடகைக்கு விட அனுமதி இல்லை. அவ்வாறு நடக்கும் பட்சத்தில் ஒப்பந்தம் உடனடியாக ரத்து செய்யப்படும்

MENU

| S.No | Name of the Items/quantity | Rate |
|---|---|---|
| 1 | Idli-2, - 200gms sambar, chatney-2, idli podi | |
| | Idli (mini) sambar 125g | |
| | Idiyappam, Kuruma/Coco. Milk-200 g | |
| 2 | Dosai 150 g(sambar, chatney) | |
| | Rava Dosai - 150 g | |
| | Masal Dosai 150g | |
| | Spl.Masal Dosai -150 g | |
| | Onion Dosai - 175 g | |
| | Wheat/ Ragi Dosai-150 g | |
| | Uthappam 150 g | |
| | Onion Uthappam 150 g | |
| | Appam 150 g | |
| | Uppuma-Rava 200 g | |
| | Paniaram 5 Pieces (Sweet & Chi)- 150 g | |
| | Kitchadi-Rava/Semiya – 200 g | |
| 3 | Pongal 200 g (sambar, chatney) | |
| | Veg. Kichadi, 200g (Chutney, sambar) | |
| 4 | Poori (pototo masala) 150 g | |
| | Chola Poori (Masala) 200 g | |
| 5 | Chappathi set (kuruma) 250 g | |
| | Pani/Masal Poori/Veg Sandwitch 200 g | |
| 6 | Parota (Chilli) 200 g | |
| | Parota 200 g | |
| | Parota kuruma 2 Nos. – 200 g | |
| 7 | Meals (as in tender) 750 g | |
| | Rice, sambar, rasam, buttermilk,poriyal,kuttu,pickle, appalam | |

| | | |
|---|---|---|
| 8 | Keerai Satham( appalam etc) 300g-with one poriyal | |
| | Tamarind Satham 300g coconut chutney | |
| | Mushroom Briyani 300 g+Onion salad, +Kuruma | |
| | Vegetable Briyani 300 g+Onion salad+Kuruma | |
| | Kuska 300 g+salad | |
| | Veg.Fried Rice 300g | |
| | Lemon Sevai 200 g | |
| | Plain sevai kuruma 200 g | |
| | Sambar Rice 300 g + Poriyal | |
| | Tomoto rice & poriyal – 300 g | |
| | Curd Rice 300 g + Pickle | |
| | Veg. Noodles -300gms | |
| 9 | Vadai 50 g | |
| | Vadai Sambar 100 g | |
| | Vadai-keerai/Thattu-50 g | |
| | Vadai-Curd 100 g | |
| | Vadai-Chilli 60 g | |
| | Pottato Chips 50g | |
| | Cutlut – 50 g | |
| | Mushroom/Green Leaf/Veg.Soup -75 g | |
| | Cauliflower/Bread chilly 150 gm | |
| | Onion Pakkoda 50 g | |
| | Paneer Pakkoda – 50 g | |
| | Samosa 50 g | |
| | Sweet Appam 50g | |
| | Sweet(Laddu,Jillebi…) – 50 g | |
| | Mixture/Sevu… - 50 g | |
| | Sundal - 75 g | |
| | Baji/Bonda 50 g | |
| | Chilli Baji – 50 g | |
| | Veg. Puffs 50 g | |
| | Mushroom Puffs 75 g | |

| | | |
|---|---|---|
| 10 | Coffee 150 ml | |
| | Chukku Coffee 150 ml | |
| | Tea 150 ml/Cardomam | |
| | Chukku/Lemon/Ginger Tea/ Green tea 150g | |
| | Plain Milk 150 ml | |
| | Pepper Milk/Filtter Coffee – 150 ml | |
| | Boost 150ml / Horlicks 150ml | |
| | Badam Milk/ -150ml | |
| | Panankarkandu Milk150ml | |
| | Masala Milk 150 ml | |
| | Adhirasam 60g | |
| 11 | Apple Fresh Juice 250 ml | |
| | Sweet orange fresh juice 250 ml | |
| | Grape fresh Juice 250 ml | |
| | Pomegranate fresh Juice-250 ml | |
| | Mango fresh Juice-250 ml | |
| | Pineapple fresh juice - 250 ml | |
| | Water melon fresh juice - 250 ml | |
| | Mosambi fresh juice - 250 ml | |
| 12 | Water Bottle - 500ml | |
| 13. | Cakes 100 g | |
| | Pop corn 100 g | |
| | Gulabjamun 100 g | |
| | Ice cream - (Amul/Aavin) -100 g | |
| 14. | Butter milk 250 ml | |

ஒப்பந்ததாரர் கையெழுத்து